சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2007 | மார்கழி 21 | முஹர்ரம் 14 (5-1-77) புதன் | புத்தகம் 30 | இதழ் 74

# வேலை நிறுத்தத்துக்கு உடன் தீர்வு காணுங்கள்!

— பிரதமருக்கு செல்வா தந்தி!

“அரசாங்கத்தினுல் இது வரை தீர்வு காணப்படாமல் தொடர்ந்து நடைபெற்று வரும் புகையிரதத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம், பிரயாணம் செய்யும் மக்களை மட்டுமல்ல—பொது மக்கள் அனைவரையும் மிகவும் பாரதூரமாகப் பாதித்துள்ளது. இந்த வேலை நிறுத்

—3-ம் பக்கம் பார்க்க

## சாரம் கிழிந்தது; கண்ணுடி உடைந்தது!

# ‘பறைத் தெமழோ உம்பவ மரணவா!’

### வெலிக்கடை வெஞ்சிறையில் சிங்கள ஜெயிலர்கள் வெறியாட்டம்!

துரையப்பா கொலை வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் வெலிக்கடைச் சிறைச்சாலை விளக்கமறியலில் ஏழு தமிழ் இளைஞர்கள் வைக்கப்பட்டிருந்தார்களல்லவா? இவர்களில் ஐந்து இளைஞர்கள் மீது இனவெறிபிடித்த சிங்கள ஜெயிலர்கள் 25 பேர் மிருகத்தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

“கள்ளத்தோணி”, “பறத்தெமிழா” என்று ஈனத்தனமான வார்த்தைப் பிரயோகங்களுடன் சிங்கள ஜெயிலர்கள் நடத்திய இத் தாக்குதலின் விளைவாக சந்ததியார் என்ற இளைஞரின் கண்ணுடி உடைந்து நொருங்கியது; கிருபாகரன், செல்வக்குமார் ஆகியோர் கடுமையான காயங்களுக்குள்ளாகினர்: தமிழ் இளைஞர்களின் நெஞ்சின்மீது ஏறிநின்றும், சப்பாத்துக்காலால் மிதித்தும் இந்தச் சிங்கள ஜெயிலர்கள் சன்னதம் ஆடியிருக்கின்றனர்.

இதைத் தொடர்ந்து தந்தை செல்வா, த. வி. கூ. செயலதிபர் மு. சிவசிதம்பரம் ஆகியோர் சிறைச்சாலை ஆணையாளருடன் தொடர்புகொண்டு உடனடி நடவடிக்கையெடுத்ததன் விளைவாக தாக்குதலுக்குள்ளான ஐந்து தமிழ் இளைஞர்களும் அவர்களது பாதுகாப்புக் கருதி “மகசீன்” சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதுடன், சிங்கள ஜெயிலர் ஒருவரும் இடமாற்றத்துக்குட் படுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

துரையப்பா கொலை வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் ஏழு தமிழ் இளைஞர்கள் வெலிக்கடை சிறையில் விளக்கமறியல்ல் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. இவர்களில் கலாவதி, கிருபாகரன், செல்வக்குமார், சிறீதரன், சந்ததியார் ஆகிய ஐந்து இளைஞர்கள் “ஓ”வார்டிலுப் லோகநாதன், விஸ்வ ஜோதி இரத்தினம் ஆகிய இருவரும் “எச்” வார்டிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

சிங்கள ஜெயிலர்கள் தாக்கிய சம்பவம் கடந்த 30-12-76 பிற்பகல் ஐந்து இளைஞர்கள் இருக்கும் “ஓ” வார்டில் இடம்பெற்றது. இதுபற்றிக் கூறப்படுவதாவது:—

“ஒரு சிங்கள வெறிபிடித்த ஜெயிலர் தமிழ் மொழியையும், இனத்தையும், குறித்த இளைஞர்களின் தாயையும் தூஷண வார்த்தைகளால் ஏசியிருக்கிறுன். இதைக்கேட்ட குறித்த தமிழ் இளைஞர்கள் அப்படிப் பேச வேண்டாம் என்று அவனிடம் கூறியிருக்கிருர்கள். அதுகேட்டு ஆத்திரமடைந்த அவன், அங்கிருந்து சென்று மேலும் 25 ஜெயிலர்களை (அனைவரும் சிங்களவர்கள்) துணைக்குக் கூட்டிக் கொண்டுவந்து தமிழ் இளைஞர்களை மிருகத்தனமாகத் தாக்கியிருக்கிருன். தமிழ் இளைஞர்களின் நெஞ்சின் மீது ஏறி நின்றும் சப்பாத்துக் காலால் உதைத்தும்,

—3-ம் பக்கம் பார்க்க



## “சுதந்திரக் கட்சியைவிட ஆபத்தானது யூ.என்.பி!”

### தொண்டமான் சொல்கிருர்!

“இந்தநாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமும் சரி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கமும் சரி, எதுவிதமான நன்மையையும் செய்யவில்லை. ஆனுல் இந்த இருகட்சிகளிலும், சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஒளிவுமறைவு அற்றது; வெளிப்படையாக எதையும் செய்யக்கூடியது; தனது வார்த்தையை விழுங்கத் தெரியாதது; ஆனுல் ஐ தே. கட்சியோ கபடத்தனம் நிறைந்தது. அதன் திட்டங்கள் என்ன என்பதைக்கண்டு பிடிக்க முடியாது!”

—இவ்வாறு ஐ. நா. மன்றத்தின் இலங்கைக்கிளை நடாத்திய கருத்தரங்கில் பேசிய இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் கூறியிருக்கிருர். (ஆதாரம் டெயிலிமிரர் 30-10-76)

# செனகல் நாட்டுத் தலைநகரில் செந்தமிழுக்கு மாநாடு!

### பேராசிரியர் மார் லண்டனில் அறிவிப்பு!

ஐந்தாவது அனைத்துலகத். தமிழாராய்ச்சி மாநாடு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான ‘செனகல்’ நாட்டில்—அதன் தலைநகரான ‘டக்கார்’ நகரில் இந்த ஆண்டு (1977) டிசம்பர் இறுதியில் தொடங்கி 1978 சனவரியில் முடிவுறும். இத்தகவலை மாநாட்டின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான பேராசிரியர் டாக்டர் மார் அறிவித்துள்ளார்.

ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை ‘செனகல்’ நாட்டுத் தலைநகரில் நடத்துவதென்ற முடிவு கடந்த ஆகஸ்ட் மாதம் மெக்சிக்கோவில் நடைபெற்ற உலகத்தமிழ் ஆராய்ச்சிக்கழகத்தின் பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக டாக்டர் மார் தெரிவித்துள்ளார். தமிழாராய்ச்சிக் கழகம் எடுத்துள்ள இந்த முடிவை லண்டனிலுள்ள உலகத்தமிழ் மறுமலர்ச்சிக் கழகத்துக்கு டாக்டர் மார் அறிவித்திருக்கிருர்.

செனகல் நாட்டிலுள்ள பல்கலைக்கழகத்தில் திராவிட மொழிகள்பற்றிய ஆராய்ச்சி நடைபெற்றுவருதுவம், செனகல்நாட்டு அரசு தமிழ் மொழிமீது அதிக அக்கறை காட்டிவருவதும் தெரிந்ததே.

ஆறுவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டை இலண்டனில் நடத்த லண்டனில் உள்ள உலகத் தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தின் இயக்குனர் திரு. ஞானசூரியன், தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளைத்தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்

—3.ம் பக்கம் பார்க்க

### தமிழர் பிரச்சினைகளை முன் வைத்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும்

# வேலைநிறுத்தத்தில் குதிக்கும்?

தற்போது நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் பங்குபற்றக் கூடுமெனத் தெரியவருகிறது. இது சம்பந்தமான முடிவை எடுப்பதற்காக சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் இச் செய்தி அச்சுக்குப் போகும் சமயத்தில் விறுவிறுப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கூட்டம் சங்கத்தலைவர் திரு. சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்துக்கு வெளியேயும் கூட்டணி போட்டியிட வேண்டும்

அரசாங்கம் த. வி. கூட்டணியின் ஒத்துழைப் போடுபொதுத்தேர்தலை ஒத்திவைக்கவிருக்கிற தென்று சில தமிழ் மக்களும், எதிர்கட்சி தலைவர் களும் இப்போது சொல்லிவருகிறார்கள். உண்மை யில் அரசாங்கம் தேர்தலை ஒரு நாள் கூட ஒத்தி வைக்க தற்சமயம் உள்ள சூழ் நிலையில் விரும்ப வில்லை. இதற்கு பல காரணங்கள் உள்ளன. தற் போதைய அரசாங்கத்துக்கு த. வி. கூட்டணியின் ஆதரவு அடுத்தபொதுத்தேர்தலில் தேவைப்படு கிறது. ஏனெனில் இம்முறை தமிழ்பேசுபவர்களின் வாக்குப்பலம் பல தேர்தல் தொகுதிகளில் குறிப் பாக மலைநாட்டுப்பகுதிகளில் அதிகரித்திருப்பதே யாகும். இவ்வாக்குகளை தங்கள் பக்கம் திருப்புவ தற்காகவே அரசாங்கம் த. வி. கூட்டணியின் தயவை நாடுகிறது. இதற்குக் காரணம் சிறுபான் மையினர் த. வி. கூட்டணியில் பெருமளவில் சேர்வதேயாகும்.

ஐக்கிய தேசியக்கட்சி தமிழர்களின் வாக்குகளைபெறுவதற்கு வேறுமுனையில் கவனம்செலுத்துகிறது. அதாவது "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மனித உரிமைகளை வழங்குவோமென்று" ஐ. தே. கட்சித் தலைவர் கூறுகிறார். இப்படியான வாக்குறுதியின் பேரில் மன்னார் இடைத்தேர்தலில் ஐ. தே. கட்சி வெற்றிபெற்றது. ஆகவே தமிழ் வாக்காளர்களை தங்கள் பக்கம் திருப்புவதற்கே இவ்விதமான போலி சுலோகங்களை ஐ.தே.க. கையாளவிருக்கிறது. ஆகையினால் த. வி. கூட்டணியின் பொறுப்பு மேலும் மேலும் அதிகரிக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தேர்தல் தொகுதிகளை தவிர்ந்து மற்றைய மாகாணங்களிலுள்ள தேர்தல் தொகுதிகள் சிலவற்றிலும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் த. வி. கூட்டணி போட்டியிடவேண்டும். சென்றபொதுத்தேர்தலில் தமிழரசுக்கும், தமிழ் காங்கிரசுக்கும் பதிவான வாக்குகளின் எண்ணிக்கை 361314 ஆகும். ஆகவே இம்முறை நடைபெறப் போகும் சிறுபான்மையினரின் வாக்குப்பலம் பிரதிபலிக்கும் வகையில் அமையவேண்டும் தமிழ் பிரதேசத்தில் த. வி. கூட்டணி எவ்வளவு வாக்குகளை பெறப்போகிறதென்பதே எதிர்வரும் தேர்தலில் அதிக முக்கியமானதாகும். ஆகையினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுமுள்ள (அம்பாறைத்தொகுதி) தவிர்ந்த எல்லாத்தொகுதிகளிலும் த. வி. கூட்டணி தனது அபேட்சகர்களை நியமிக்க வேண்டும். மட்டக்களப்பு பொத்துவில் ஆகிய இரட்டை அங்கத்தவர்கள் தொகுதிகளிலும் முறையே இரண்டு தமிழர்களையும், இரண்டு முஸ்லிம்களையும் போட்டிக்கு நிறுத்தவேண்டும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலை நிலவினால் அதில் அதிகபலன் உண்டு. ஏனெனில் ஆட்சி பீடத்தை கைப்பற்றுபவர்கள் எங்கள் பிரதிநிதிகளைப் பார்த்து உங்களுக்கு எதிராக விழுந்த வாக்குகள் நீங்கள் பெற்றவாக்குகளிலும் பார்க்க வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூடுதலாகவிருக்கிறதென்று சொல்லுவதற்கு இனிமேலும் இடம் வைக்கக்கூடாது.

## தனிநாடு கொள்கையை அனைவரும் ஏற்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட இதுவே சரியான வழி

அடுத்ததாக வடக்கு, கிழக்கு தவிர்ந்த மற்றைய மாகாணங்களிலுள்ள தேர்தல்தொகுதிகள் சிலவற்றை கவனிப்போம். தென் மாகாணத்திலுள்ள கொழும்பு மாநகரசபையை எடுத்துக் கொள்வோம். இங்கு ஐந்து தேர்தல் தொகுதிகள் இருக்கின்றன. அவற்றுள் கொழும்பு வடக்கு, கொழும்பு—மத்தி, கொழும்பு தெற்கு ஆகிய தொகுதிகளிலும் கணிசமான அளவில் தமிழ் பேசும் இனத்தவர்களின் வாக்குகள் இருக்கின்றன. ஆனால் கொழும்பு வடக்கில் சிறுபான்மையினருடைய வாக்குப்பலத்தை சேர்த்துப் பார்த்தால் சிங்களவர்களுடைய வாக்குகளிலும் பார்க்க கூடுதலாகவிருக்கிறது. ஆகவே இத்தேர்தல் தொகுதிக்கு கூட்டணி ஒரு வேட்பாளரை தேர்தலுக்கு நிறுத்துவது சாலச்சிறந்ததாகும்.

புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு இவை போன்ற சில தேர்தல் தொகுதிகளிலும் த.வி. கூட்டணி அபேட்சகர்களை பொதுத்தேர்தலில் நிறுத்தவேண்டும். இவ்விதச் செய்கையால் இரு பெரும் சிங்களக்கட்சிகள் பாதிக்கக்கூடும். இவ்விதமான பாதிப்பு விரும்பத்தக்கதாகும்.

சில எதிர்கட்சித் தலைவர்கள் (இரண்டு மூன்று தமிழர்கள் உள்பட) கூறுவதென்னவென்றால் த. வி. கூட்டணிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில்தான் செல்வாக்கு உண்டென்றும், மற்றைய மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் த. வி. கூட்டணியை ஆதரிக்கமாட்டார்களென்றும் கூறித்திரி[illegible]ர்கள். இந்த கூற்றுக்கு [illegible]திர்வரும் பொதுத் தேர்[illegible]தல் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அதாவது இம்முறை நடைபெறப்போகும் தேர்தலில் த. வி. கூட்டணி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே 200,000 வாக்குகளையாவது பிறமாகாணங்களிலிருந்து பெற வாய்ப்புண்டு. இப்படியான ஒரு வெற்றியைத்தான் அனேக தமிழ் இளைஞர்கள் குறிப்பாக வடக்கு கிழக்கு எல்லைக்கு அப்பால் நிரந்தரமாக வசிப்பவர்கள் வேண்டி நிற்கிறார்கள். இதை நாம் அரசுக்கும் எடுத்துக்காட்டவேண்டும்.

ஆகவே இம்முறை நடைபெறப்போகும் தேர்தலில் ஆகக்குறைந்தது 700,000 வாக்குகளையாவது தமிழர் கூட்டணி பெற்றேயாக வேண்டும். தமிழ் பேசுபவர்களை பொறுத்தமட்டில் இது ஒரு பொதுசன வாக்கெடுப்பாகவே விளங்கும். எங்கள் பலமும் குறைந்ததல்ல என்பதை அரசுக்கும் பிறநாட்டவர்களுக்கும் எடுத்துக்காட்டலாம். அதேவேளையில் எங்களுடைய ஒற்றுமையை மேலும் பலப்படுத்தலாம்.

**தும்பளை கு. அழகரத்தினம்**

## அமரர் 'திரு'வுக்கு அஞ்சலி!

உள்ளத்தாற் பொய்யா தொழுகித் தமிழினத்தின் உள்ளத்திலெல்லாம் இடம் பெற்றுவிட்ட உத்தமர் 'திரு'வின் ஆத்ம சாந்திக்காக சென்ற டிசம்பர் 21ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று, புராதனப் பெருமைவாய்ந்த திருக்கேதீஸ்வர ஆலயத்திற் கோவிற்குளம் இந்து இளைஞர் மன்றத்தினர் விசேட பூசைகளை நடாத்தினார்கள்.

மன்றத்தலைவர் திரு. அ. சிற்றம்பலம், தலைமைச்செயலாளர் திரு. பொன். இராமநாதன் உட்பட மன்ற அங்கத்தினர்கள் பல நூற்றுக்கணக்கானவர்கள்பிரஸ்தாப பூசையிற் கலந்துகொண்டனர்.

ஆரம்பத்தில் அங்கத்தினர் அனைவரும் பாலாவித் தீர்த்தத்தில் நீராடிப் பக்தி சிரத்தையுடன் வழிபாட்டிற் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலயப் பிரசாதம், திருநீறு என்பன அமரர் 'திரு'வின் குடும்பத்தினருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

## தமிழர் விடுதலைக் கூட்டணி கல்முனைக் கிளை

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கல்முனைக் கிளையின் நிருவாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். காப்பாளர்கள்: திரு. பி. வி. கந்தையா பிரசித்த நொத்தாரீஸ், ஜனாப் ஆ. உதுமாலெவ்வை டாக்டர் திரு. ஏ. பிரகாசம். தலைவர்: திரு. கு. ஏகாம்பரம். உபதலைவர்: திரு. நா. மயில்வாகனம். செயலாளர்: கல்முனைக் கலைக்கொழுந்தன் உபசெயலாளர்: திரு இரா. பன்னீர்ச்செல்வம். பொருளாளர்: திரு. டி. ஆர். நடேசன் மற்றும் ஏழுபேர் கொண்டசெயற்குழுவும் தெரிவாகியுள்ளது.

## 'வைகறை' நூல் வெளியீடு

கடந்த தைப்பொங்கலிலன்று 'அறுவடை' நூலை வெளியிட்டு மகிழ்வித்த வேல் வெளியீட்டகத்தார் இவ்வர்ண்டுப் பொங்கல் விருந்தாக அமுதன் எழுதிய 'வைகறை' நூலை வழங்கவிருக்கின்றனர். 'வைகறை' நூல் வெளியீடு தைப்பொங்கலின் இரண்டாம் நாள் 15-1-77 சனிக்கிழமை மாலை 5.30க்கு கொழும்பு, விவேகானந்த சபை மண்டபத்தில் இனிது நடைபெறும். வெளியீட்டு வைபவத்தில் பல இலக்கிய அறிஞர்கள் கலந்து, சொற்பொழிவாற்றிச் சிறப்பிக்கவுள்ளனர்.

## திருகோணமலை ப.நோ.கூ.சங்கங்களில் த.வி.கூ. ஆதரவாளர்களை பழிவாங்கச் சூழ்ச்சி?

திருகோணமலைத் தொகுதியிலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் பலர் பழிவாங்கப்படுகின்றனர். அதுவும் நகர எல்லையில் அமைந்திருக்கும் இரண்டு கிளைச்சங்கங்களில் கடமையாற்றும் இரண்டு முகாமையாளர்களும் எந்நேரமும் வேலையை இழக்கும் சூழநிலையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் இருவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிர ஆதரவாளர்களும் தமிழ் இளைஞர்பேரவையின் அங்கத்தவர்களும் என்ற காரணத்தினால்தான் இந்நிலை தோன்றியுள்ளது.

அத்துடன் உதயசூரியன் சின்னம்பொறித்த [illegible] ரொட்டிகளை அவர்கள் [illegible]கள் சங்கச் சுவர்களில் ஒட்டுவதற்கு அனுமதி அளித்ததும் அண்மையில் நடந்த தமிழர் விடுதலைக்கூட்டணியின் கூட்டம் ஒன்றில்கலந்துகொண்டதும் இன்னும் மோர் காரணமாக கருதப்படுகின்றது.

சென்றவாரம் ப. நோ. கூ. சங்கங்களின் திருகோணமலைத் தலைமைச் செயலகத்தினுள் ஒட்டப்பட்டிருந்த பண்டாரநாயகாவின் படத்தை கிழித்துவிட்டு அவ்விடத்தில் துரோகி என்று எழுதப்பட்டிருந்தது. இதை பார்த்துவிட்டு திருகோணமலை உதவி உணவுக் கட்டுப்பாட்டு ஆணையாளர் (இவர் ஓர் சிங்களவர்) 10-12-76ல் அங்கு வேலைசெய்யும் ஊழியர்களையும் முகாமையாளர்களையும் அழைத்து ஓர் மகா[illegible] [illegible]மாய் கண்டித்து பண்டாரநாயகாவின் படத்தைகிழித்தவர்கள் இந்தநாட்டின் துரோகிகள் இனத்துவேஷம் கொண்டவர்கள்; இந்தச் செயலைசெய்தவர் மிகவும் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப் படுவார் என்றும் பேசியதுடன் தமிழர்களை புண்படுத்தும் பொருள்படவும்பேசியுள்ளார். இப்பொழுது அவரின் பார்வை நகர எல்லையில் உள்ள அந்த இரண்டு முகாமையாளர்கள் மீதும்தான் தாவியுள்ளதாம்.

திருகோணமலையில் சுமார் 26 கிளைகள் உள்ளன. அதில் 3 கிளைகள்தான் சிங்களவர்க்குரியது மற்றும் அனைத்தும் தமிழ் மக்களின் வட்டாரங்களில் அமைந்துள்ளது அத்துடன் இங்கு நூற்றுக்கு தொண்ணுற்றைந்து [illegible] தமிழர்களே கடமை புரிகின்றனர். இப்படியிருந்தும் ஓர் சிங்களவர் உதவி உணவுக்கட்டுப்பாட்டு ஆணையாளராக நியமிக்கப்பட்டு தமிழ் ஊழியர்களை பழிவாங்கிக் கொண்டிருக்கின்றாராம். இதையிட்டு திருகோணமலை பா. உ. நடவடிக்கையெடுக்க வேண்டுமென அங்கு கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள் அனைவரும் எதிர்பார்க்கிறார்கள்.

## தமிழ் மகளிர் பிரார்த்தனை

தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக் கிளையினர் தமிழின நலன் வேண்டி நடாத்தும் வாராந்தப் பிரார்த்தனை 7-1-77 வெள்ளிக்கிழமை பம்பலப்பிட்டி செ ன். மேரீஸ் தேவாலயத்தில் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தனிநபர் புகழ்பாடத் தேவையில்லை! தமிழ்ஈழ இலட்சியமே முக்கியமானது!’



## யாழ் கருத்தரங்கில் ஆலாலசுந்தரம் வலியுறுத்து!

“சமூகப் புறக்கணிப்பின் மூலமே — இனத்துரோகம் செய்து—நீலக்கொடி — சிகப்பு கொடி — பச்சைக்கொடி பிடிக்கும் தமிழர்களைத் திருத்தமுடியும். ஒருவன் எதிரணியினைச் சேர்ந்து நின்றால் அவனுடைய சாவீடு - மணவீடு போன்றவைகளுக்கு போகாமலும் — விடுதலை உணர்வுள்ளவர்களின் செத்தவீடு கல்யாணவீடுகளுக்கு அவனை வரவிடாமலும் பகிஷ்கரிப்பதன் மூலமே இனத்திடையே இருக்கும் இனத்துரோகிகளை திருத்தமுடியும்.”

தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலக மண்டபத்தில் சட்டத்தரணி வி. யோகேஸ்வரன் தலைமையில் கருத்தரங்கம் அண்மையில் நிகழ்ந்தது. முதலில் யாழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. கரன் [illegible] பேசினார். அவர் தமது உரையில் “அரசியல் —பொருளாதார— கலாச்சாரப்— புரட்சிகளை ஏக காலத்தில் நடாத்துவதற்கு இளைஞர் சமுதாயம் தயாராக வேண்டுமென்று, வற்புறுத்தினார்.


அவரை அடுத்து யாழ் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. சபா செந்துராசா பேசுகையில் “திருமலை நடராசா— மலையக ஐயாவு பிரான்சீஸ் போன்றவர்களின் சதையால் இரத்தத்தால் உருவாக்கப்பட்டு சிவகுமாரனின் உயிரால் உயிரூட்டப்பட்ட இவ் விடுதலை இயக்கம் ஒன்றாலேயே தமிழர்களின் விடுதலையைப் பெற்றுத்தர முடியும் என்றும் தனது குடும்பத்தையே விடுதலை வேள்விக்கு பலியாக்கிய அண்ணன் அமிர்தலிங்கம் போன்றவரின் தலைமையை விட வேறு சிறந்த தலைமையை இளைஞர்கள் எதிர்பார்க்க முடியாதென்றும் கூறினார். அத்துடன் பார்வையாளர்கள் என்ற நிலையில் நில்லாது அனைத்து இளைஞரும் பங்காளிகளாக மாறி விடுதலையை விரைந்து பெற உதவ வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார்.

சிறப்பு செற்பொழிவு ஆற்றிய சட்டத்தரணி அட வேறு ஆலால சுந்தரம் அவர்கள் பேசுகையில்— “இன ஒற்றுமையே பெரிதென்றும். தனிநபர் புகழ்ச்சிகள் தவிர்க்கப்படல் வேண்டுமென்றும் கூறினார். அத்துடன் சமூகப் புறக்கணிப்பின் மூலமே எமது அரசிய லெதிரிகளையும் எமது வழிக்கு மாற்ற வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

“ஒரு கடைக்காரன் அரசின் எடுபிடியாக இருப்பின் அவனது கடையை பகிஷ்கரிப்பதன் மூலமே அவனுக்கு இன உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தினார். மேலும் அமிர்தலிங்கங்களோ ஆலால சுந்தரங்களோ வந்து தான் கருத்துரைகள் வழங்க வேண்டுமெனும் நிலை மாறி சாதாரண கட்சித் தொடர்களே அரசியல் விளக்கம் அளிக்குமளவுக்கு தொண்டர்கள் தமது அரசியல் அறிவைப் பெருக்க வேண்டும் என்று கூறிய அவர் தமது கருத்துக்கு உதாரணமாக தி. மு. க. வில் அண்ணாவைப் போலவே அதே தெளிவுடன் அரசியல் பேசும் தம்பிமார் அயிரக் கணக்கில் இருந்ததைக் குறிப்பிட்டார்.

தமிழ் இளைஞர்கள் ஈழத்தமிழகத்தின் விடுதலை வரலாற்றை— தமிழர் இயக்கங்கள் வளர்ந்த வரலாற்றை நன்றாக அறிந்திருக்க வேண்டுமென்றும் இதற்கு இத்தகைய கருத்தரங்கங்கள் பயன்பட வேண்டுமென்றும் வலியுருத்திய அவர் 1947ல் இருந்து தமிழ் இயக்கங்கள் வளர்ந்த விதத்தை விளக்கினார். அமரர் வன்னிய சிங்கம் போன்ற தலைவர்கள் “அன்றே சமஷ்டி கேட்பது முதல்படி எனவும் தமிழரசே இறுதி இலட்சியம் எனவும் தீர்க்கதரிசனமாக உணர்ந்து இருந்தார்கள் எனவும் அதனாலேயே சமஷ்டி கேட்ட கட்சிக்கு தமிழரசு என்ற பெயரை பதிவு செய்தார்களெனவும் தெளிவுபடுத்தினார். இறுதியாக முஸ்லீம் மக்கள் தமிழர்களின் பிரிக்கமுடியாத சகோதரரர்கள் என வலியுறுத்தினார்.

# ‘இலட்சியத்தில் அழுத்தமான நம்பிக்கை நமக்கு ஏற்படவேண்டும்!’



## பருத்தித்துறை பா. உ. அறிவுரை!

மருதங்கேணி செம்பியன் பற்று காரியாலயம திறப்பது பற்றியும் தமிழ் இளைஞர் பேரவை தமிழர் விடுதலைக்கூட்டணி கிளைகள் அமைப்பது பற்றியும் ஆலோசனைக்கூட்டமும் கருத்தரங்கும் செம்பியன் பற்றில் 27-12-76 மாலை ஆரம்பமாகியது பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். த. துரைராசா அவர்கள் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பருத்தித்துறை தொகுதி தமிழ் இளைஞர் பேரவை தலைவர் சட்டத்தரணி கனக. மனோகரன் பேசுகையில் இன விடுதலைப் போராட்டம் நாடாளுமன்றத்திற்கு உள்ளுமவெளியிலும்நடக்கவேண்டியது. இதில்வெளியேநடக்க வேண்டிய போராட்டமே முக்கியமானது. கூடிய பலன் அளிக்கக்கூடியது வெளிப் போராட்டம் கூடிய பலன் அளிக்க வேண்டுமென்றால் இளைஞருக்கு பரவலாக பங்குணர்வு ஏற்படுத்தப்பட்டு இளைஞர் ஒவ்வொருவரும் பங்கெடுக்கும் நிலை உருவாகினால்தான் விரைவாகவும் குறைந்த விரயத்தோடும் எமக்கொரு நாடு அமைக்க முடியும் என்றார்.

பருத்தித்துறை தொகுதி தமிழ் இளைஞர் பேரவை செயலாளர் சி. பாலகிருஷ்ணன் பேசும்போது கூறியதாவது:—

தனிநாடு தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முடிந்த முடிவு. அதுபற்றிய புனர் ஆலோசனைக்கோ இடமில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி இம்முடிவுக்கு குந்தகம் விளைவிக்கும் எச்செயலிலும் ஈடுபட மாட்டாது. தலைமைப் பீடத்தில் நம்பிக்கை வைத்து இளைஞர்கள் செயற்படவேண்டும். தலைவர்களை குறை சொல்லிக் கொண்டு தாம் எதுவும் செய்யாதிருப்பவன் இயக்கத் தொண்டன் ஆகமாட்டான். எங்கள் பாராளுமன்ற உறுப்பினர் துரைரத்தினம் ஒரு சிறந்த அரசியல் வாதி. பொருளாதார நிபுணன். அவரது சேவை எங்களுக்கு தொடர்ந்து தேவை என்றார்.

பருத்தித்துறை பா. உ. துரைரத்தினம்பேசும்போது கூறியதாவது:- நான் செய்கின்றசேவைகளை விளம்பரப் படுத்தும் பழக்கம் எனக்கு கிடையாது. நான் இந்தப் பகுதிக்கு வருவதே கிடையாது என்று சிலர் பிரசாரம் செய்கிறார்கள். இப்பகுதி மக்களின் அழைப்பை ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பங்குகொண்டிருக்கிறேன். உதவித் திட்டமிடல் இயக்குனரை நானே அழைத்துவந்து இப் பகுதியின் பின் தங்கிய நிலையை தெளிவுபடுத்தி கூடுதலான நிதி ஒதுக்கீட்டை பெற்றுக்கொடுத்துள்ளேன். பல ஆக்கபூர்வமான வேலைகளை ஆரம்பித்திருக்கிறேன். தொடர்ந்தும் இதை செய்வேன். ஸ்ரீலங்கா குடியரசின் கொழும்பு மேலிடத்திலிருந்து நிதி பெறும் நிலைமை மாறினால் கூடுதலாக ஆக்க வேலைகள் நடத்த முடியும் என்றார்.

“நம்மை நாம் ஆளுவது என்ற தீர்மானத்தில் நாம் தெளிவுடனும் உறுதியுடனும் இருந்து வாய்ப்பும் வசதியும் நேரும்போது நமது தேச விடுதலையை வென்றெடுக்க வேண்டும். அதே சமயம் விடுதலை பெற்ற பின்னர் பிரச்சினைகளேதுமின்றி ஒன்றுபட்ட சமுதாயமாக தமிழ் சமுதாயம் முன்னேறுவதற்கு தமிழ் சமுதாயத்திலுள்ள மூடத்தனங்களையும் சீர்கேடுகளையும் அகற்றி ஒன்றுபட்ட சமுதாயத்தை சிருஷ்டிக்கும் பணியில் இப்போதிருந்தே ஈடுபடவேண்டும். நாம் சுதந்திரமாக வாழவேண்டுமென்ற எண்ணத்தை நமது மக்களுக்கு ஊட்டி அறிவுச் சுடரைக் கொழுத்தவேண்டும் இதுவே நமது இன்றைய பணி. தமிழினம் இன்று தன்னைத் தானே ஆளுகின்ற நிலையை தோற்றுவிப்பதைத் தவிர இந்நாட்டில் வாழ்வதற்கு வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டது. எனவே நாம் இதில் தெளிவு பெறவேண்டும்.

“நமது விடுதலையை நாம் வென்றெடுக்க முடியுமா? வென்றெடுக்க முடியுமானல் எப்போது சாத்தியமாகும்? என்ற கேள்விகளை எழுப்பி நம்பிக்கையை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த நம்பிக்கை அதாவது அழுத்தமான இலட்சிய நம்பிக்கை நமக்கு ஏற்பட்டுவிட்டதென்றால் விடுதலைப் பயணம் இலகுவாகிவிடும். நமது இளைஞர்கள் மனதில் குழப்பமோ தெளிவின்மையோ இருக்கக்கூடாது என்று கூறினார்.

இதையடுத்து பருத்தித்துறை தொகுதி தமிழர் கூட்டணி செயலாளர் இ. து. இரத்தினசிங்கம் மண்டலாய் தமிழ் இளைஞர் பேரவை தலைவர் அ. சதாசிவம், சொ. ஜெயராசா சி. தெய்வேந்திரம், க. ஆனந்தமூர்த்தி மற் [illegible]

## பறைத் தெமழோ உம்பவ மரண...

—1-ம் பக்கத் தொடர்

தூஷணை வார்த்தைகளால் ஏசியும் 25 பேருமாகச் சேர்ந்து ஐந்து இளைஞர்களைத் தாக்கியிருக்கிறார்கள். அப்போது சந்ததியார் அணிந்திருந்த மூக்குக் கண்ணாடி சுக்கல் சுக்கலாக உடைந்தது; கிருபாகரனின் சாரம் தூள்தூளாகக் கிழிந்தது. கிருபாகரனும், செல்வக்குமாரும் கடுமையான காயங்களுக்கு ஆளானார்கள்.

“பறைத் தமிழா, உம்ப மரணவா” (பறைத் தமிழர்களே, உங்களைக் கொல்லுவேன்”) என்று கூறியபடி தாக்கினார்களாம். தாக்குதல் நடைபெறும்போது, அங்கு ஒரு சிங்கள ஜெயிலர். One by one (ஒவ்வொருவராக) என்று கூறித்தாக்கினாராம்!

இச் சம்பவத்தை கேள்வியுற்றதும், இதுபற்றி உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு மூதறிஞர் தந்தை செல்வா அவசரத் தந்தி அனுப்பினார். அத்துடன் கூட்டணி செயல் அதிபர்களில் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரம் உடனடியாக சிறைச்சாலைக்கு சென்று ஆணையாளரிடம் தமது பலமான கண்டனத்தைத் தெரிவித்தார்.

இதையடுத்து குறித்த தமிழ் இளைஞர்களின் பாதுகாப்புக் கருதி ஐவரும் உடனடியாக “மகசீன்” சிறைக்கு மாற்றப்பட்டதுடன், சிறை வைத்தியசாலையில் அவர்களது காயங்களுக்கு மருந்து போடப்பட்டது. சிறைக் காவலர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டார்.

சிறைச்சாலையில் வைத்து தமிழ் இளைஞர்கள் தாக்கப்படுவது இதுவே முதல் தடவையல்லவென்பதும், வெலிக்கடை சிறைச்சாலையிலும், அனுராதபுரம் சிறையிலும், மாத்தறைச் சிறையிலும் இதற்கு முன்னர் தமிழ் இலைஞர்கள் வெறிபிடித்த சிங்கள உத்தியோகத்தர்களாலும் சிங்களச் சிறைக்கைதிகளினாலும் தாக்கப்பட்டிருக்கும் சம்பவங்கள் நடைபெற்றிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## செனகல்நாட்டு...

—3-ம் பக்கத் தொடர்

தன், உலகத்தமிழர் பண்பாட்டு கழகச் செயலாளர் குரும்பசிட்டி இரா. கனகரத்தினம், ஆகியோர் முழுமுயற்சிகள் எடுத்து வருகின்றனர். லண்டனில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெறுமானல் உலகத் தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழாவும் அங்கு நடைபெறலாமென திரு. ஞானசூரியன் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட செய்தியை ‘லண்டன் முரசு’ டிசம்பர் 15 (1976) இதழ் வெளியிட்டுள்ளது.

## வேலைநிறுத்...

—1-ம் பக்கத் தொடர்

தம் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் உணவுப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உணவுப்பொருட்கள் தப்பித்தவறிக் கிடைத்தாலும், மக்கள் வாங்கமுடியாத விலைகளில் அவை விற்கப்படுகின்றன. ஏனைய தொழிலாளர் பிரிவுகளுக்கும் வேலை நிறுத்தம் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. தயவுசெய்து உடனடியாக வேலை நிறுத்தத்துக்கு ஒரு தீர்வுகண்டு, மக்களின் துன்பத்துக்கு முடிவுகாணுங்கள்!”

இவ்வாறு கூறும் அவசரத் தந்தியொன்றை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா அவர்கள் பிரதமர் திருமதி பண்டாரநாயகாவுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அனுப்பிவைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

# தனிநாடு கோரிக்கையை தள்ளிவைக்க வேண்டுமாம்...!

## தனது மந்திரி பதவியைத் தருவாராம் சூரியர் அண்ணாச்சி தூ.... தூ.... தூ....!!!

“அந்நியனுக்கு கப்பம் செலுத்தி வாழ ஒப்புக் கொள்; பரங்கித்துரையின் காலில் விழுந்து மன்னிப்புக் கேள்; உன்னை மன்னித்து உனது பாஞ்சாலங் குறிச்சி யையும் உன்னிடமே ஒப்படைப்பான் வெள்ளைத் துரை...” என்று அன்று தன் மான வீரன் கட்டபொம்மனுக்கு ஆலோசனை கூறினனும் அவனை எலும்புத்துண்டுக்காக வெள்ளை நாய்களுக்கு காட்டிக்கொடுத்த எட்டப்பன் எனும் இனத் துரோகி!

அப்போது, “சீ...நீயும் என் இனத்தவனு? கோழையே என்முன் நிற்காதே! கேவலம் எலும்புத் துண்டுக்காக மாற்றானிடம் மண்டியிட்ட மடையனே! என் முன்னால் நிற்காதே, ஓடு! என்று கூறி அவன் முகத்தில் காறியுமிழ்ந்தானும் வீரபாண்டிய கட்டபொம்மன்!

“தனிநாடு கோரிக்கையை தள்ளிவைத்துவிட்டு அரசாங்கத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்; அப்படி ஒத்துழைப்புக் கொடுக்க முன்வந்தால்நான் எனது மந்திரி பதவியை கூட்டணியினருக்கு வழங்குவேன்...” என்று குமாரசூரியர் கூறியிருப்பதாக 2-1-77 வீரகேசரியில் வெளிவந்த செய்தியைப் படித்தபோது எட்டப்பன் கட்டபொம்மனுக்கு கூறிய மானங்கெட்ட ஆலோசனையே என் நெஞ்சில் பளிச்சிட்டது!

தமிழ் ஈழத்தின் புனித சுதந்திரத்துக்காக போராடும் ஒரு விடுதலை இயக்கத்தினரைப் பார்த்து இப்படிக் கூறுவதற்கு குமாரசூரியருக்கு என்ன துணிச்சல்?

அந்நிய பரங்கிக்கு ஆராத்தியெடுத்தான் அன்று எட்டப்பன்! தன் இனத்தைக் காட்டிக் கொடுத்தான் அத்துரோகி!

இன்று அந்நிய சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு ஆராத்தி எடுக்கிறார் செல்லையா குமாரசூரியர்! தன் இனத்தையே மாற்றானுக்கு காட்டிக்கொடுக்கிறார்!

பதவிக்கு வந்ததும், தமிழினத்தைக் கலப்புச் சாதியென்று பழித்த குமாரசூரியர்; பின்னர், சிங்களப் பெண்ணை தமிழனும், தமிழ்ப் பெண்ணை சிங்களவனும் திருமணம் செய்தால் பிள்ளை பிறக்காதா என்று கேட்ட ‘மேதாவி’ குமாரசூரியர்; பல்கலைக்கழகத் தெரிவில் திறமை அடிப்படை நீக்கப்பட்டால் மந்திரி பதவியை விட்டு விலகுவேன் என்று சவடால் அடித்த குமாரசூரியர்; கடந்தஏழுஆண்டுகளாக திறமையடிப்படை நீக்கப்பட்டு தரப்படுத்தல் எனும் சதித் திட்டத்தினகீழ் தமிழ் மாணவர்களின் உயர் கல்வி கழுத்தறுக்கப்பட்டு வருகின்றதைக் கண்டபின்னும் அப்பதவி விலகாமல் அப்படுதுரோகத்துக்குப் பக்கப்பாட்டுப்பாடி வரும் குமாரசூரியர்; சிங்களவனுக்கு மட்டுமே நாட்டை ஆள உரிமையுண்டு என்று சிங்கள அரையமைச்சர் ஒருவர் கூறியதைக்கேட்டுக் கொண்டு வெட்கம் மானம் ரோசம் எதுவுமின்றி பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் குமாரசூரியர்; ஆம் — இப்படிப்பட்டவர்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாடு கோரிக்கையை ஒத்தி வைக்கவேண்டும் என்று இலவச ஆலோசனை கூறுகிறார்!

குமாரசூரியர் அவர்களே! உங்களைப்போன்று சிங்கள அரசுக்கு ஜால்ராபோடும் கொள்கையற்ற கூட்டமல்ல தமிழர் விடுதலைக் கூட்டணி!

அது இந்நாட்டு மானத் தமிழர்களின் பேரியக்கம்; தமிழ ஈழ விடுதலைக்குபோராடும் வீரர்களின் பாசறை!

‘தனிநாடு’ கோரிக்கை நம் இயக்கத்தின் முடிந்த முடிவு; மாற்றமுடியாத இலட்சியம்; கைவிடப்பட முடியாத குறிக்கோள்!

‘தனிநாடு’ ஒன்றுதான் இந்த நாட்டுத் தமிழ் மக்களின் ஜீவசக்தி; தமிழினத்தின் திசையறி கருவி!

மண்ணின் பங்கை விரும்பிச் சுதந்திரத்தின் மாண்பினை இழக்கக்கூடியவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியில் எவருமில்லை!

கொள்கையை கோட்டைவிட்டு, பதவிக்காக பல்லிளிக்கும் தலைமையல்ல —தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை!

மந்திரிப் பதவிதான் தமிழர் கூட்டணியின் இலட்சியமாக இருந்தால் — ஒன்றல்ல; பல மந்திரிப்பதவிகளை கூட்டணியினர் என்றோ பிடித்திருக்கமுடியும்!

கொள்கையை மறந்து— பதவிபிடிக்கும் வேலையில் கூட்டணி இறங்கியிருந்தால், குமாரசூரியரும் அருளம்பலமும், இராசன் செல்வநாயகமும் ஆளுங்கட்சியின் நிழலைக்கூட இன்று அண்டியிருக்க முடியாதே!

குமாரசூரியரே! குமாரசூரியரே! உமது கதையைக் கேட்டு அங்கொடையிலுள்ள பைத்தியக்காரன் கூடச் சிரிக்கிறான்!

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு முத்திரை மந்திரி பதவிதர நீர் யார்? உமக்கு அந்தப்பதவி இரண்டு லட்ச ரூபா பெறுமதி உள்ளதாக இருக்கலாம்!

ஆனால் மானத்தமிழனுக்கு உமது மந்திரிப்பதவி வெறும் கால் தூசிக்குச் சமானம்!

குமாரசூரியரே! உமது புலம்பல் எமக்குப் புரிகிறது!

எங்கும் அலைந்து அலைந்து திரிந்தீர்; எந்த ஒரு தொகுதியும் உம்மை ஏறகத் தயாராக இல்லை; எட்டி உதைக்கவே தயாராக இருக்கிறதென்பதைப் புரிந்துகொண்டீர்!

இப்போது அம்மாவின் ஆட்சிக்காலத்தை மேலும் நீடித்தாவது உமது ஆள் அம்பு, அதிகாரம் ஆகியவற்றை காப்பாற்றலாம் என்று கனவுகாணுகிறீர்! தேர்தல் வந்தால் ‘அட்ரசே’ இல்லாமல் போய்விடுவீர் என்பதைப் புரிந்துகொண்டு விட்டதால் பித்தம்பிடித்து அலட்டத் தொடங்கியிருக்கிறீர்!

அதனால்...தமிழர் விடுதலைக் கூட்டணி, அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுத்தால் ...என்று உமது கற்பனையில் எண்ணும்போது உமக்கு நாக்கில் நீர் சுரக்கிறது!

ஆனால்—தமிழர் விடுதலைக் கூட்டணி விடுதலை உணர்ச்சி பொங்கியெழும் பெரு நெருப்பு; அதனோடு வீணாக விளையாடினீர் என்றால், உமது விரல்தான் சுடுமே தவிர, கூட்டணிக்கு நட்டமேதும் இல்லை!

பாவம், உம்மை நினைக்கும்போது ஒருபுறம் பரிதாபமாகவும் இருக்கிறது!

‘பைத்தியக்காரன் பலதும் சொல்வான்— போகட்டும் விட்டுவிடு’ என்ற பாடல் என் நினைவுக்கு வருகிறது.

குமாரசூரியரே போகட்டும் விட்டுவிடுகிறேன், ஆனால் இனிமேலும் கூட்டணியை — தனிநாடு இலட்சியத்தை வம்புக்கு இழுக்காதீர்! இழுத்தால் எனது பேனாவும் சும்மா இருக்காது!

—எரியீட்டி

## தமிழர் பிரச்சினைகளை முன்வைத்து..

—1-ம் பக்கத் தொடர்

பின்வரும் முக்கிய கோரிக்கைகளை வைத்து சங்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடலாமெனச் சொல்லப்படுகிறது.

* பழைய அரச ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் பொழுதும் புலமைப் பரிசில்கள் வழங்கும் பொழுதும் சிங்களத்தேர்ச்சியை அறவே அனுசரிக்கக்கூடாது.

* புதிய ஊழியர்களுக்குச் சிங்களத் தகமை இன்மை என்ற காரணத்தைக் காட்டி அரசினால் வழங்கப்பெற்ற சகலவேலை நீக்க அறிவித்தல்களையும் வாபஸ்பெறுதல்.

55 வயதுக்கு மேற்பட்டோருக்கு சேவை நீடிப்பு வழங்குதலில் சிங்களத தகமை கோருதல் இரத்துச் செய்தல்.

* பொ. எ. சேவையைச் சேர்ந்த அனைவருக்கும் ஆரம்பச் சம்பளமாக ரூபா. 400/- மாதாமாதம் வழங்குதல்.

* உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவை ஈடு செய்தற்கு ஒவ்வோர் வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கும் ரூபா 3/- கொடுத்தல்.

* ரூபா 500/- பண்டிகை முற்பணம் கொடுத்தலும் அதனை நீண்டகாலத் தவணையில் திரும்பச் செலுத்த வசதியளித்தலும்.

* அரசியல் காரணங்களுக்காக சிறையில் நீண்டகாலமாக விசாரணையின்றி வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்தல்.

ஈழத்தின்
மிகச் சிறந்த
கலை இலக்கிய ஏடு

சுடர்
CHUDAR

மார்கழி இதழ்

இப்போது எங்கும்
விற்பனையாகிறது

விலை ரூபா ஒன்று மட்டுமே

## புகைவண்டிப்பகுதி ஊழியர் சங்கமும் வேலைநிறுத்தம்!

மொழிவழித்தொழிற் சங்கங்களில் ஒன்றான புகைவண்டிப் பகுதி ஊழியர்சங்கமும் 2-1-77முதல் வேலை நிறுத்தத்தில் குதிக்கமுடிவு செய்துள்ளது. மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. குணரத்தினம் தனது சொந்தக் காரணங்களை முன்னிட்டு சங்கத் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.

## பிரதமருக்கு இ. தொ. கழகம் அவசரக் கடிதம்

“புகையிரத வேலை நிறுத்தத்தினால் நாட்டு மக்கள் குறிப்பாக மலையகத்தில் தோட்டப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும் உணவுத் தட்டுப்பாட்டினை எதிர் நோக்கியிருக்கின்றனர். இவ் வேலை நிறுத்தம் தொடர்ந்தும் நீடிப்பதனால் மலையக மக்கள் உணவு மற்றும் அன்றாட வாழக்கைக்குத் தேவையான அத்தியாவசியமான பொருட்களின்றி பட்டினியால் இறக்கவேண்டிய அபாயத்தை எதிர்நோக்கியிருக்கின்றனர். எனவே இவ் வேலை நிறுத்தத்தை சம்பந்தப்பட்ட தொழிற்சங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி சுமுகமாக தீர்த்து வைக்கவும்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் கழகப் பொதுச்செயலாளர் திரு. மு. பராஜசிங்கம் அவர்கள் பிரதமருக்கு அனுப்பிவைத்த அவசரக் கடிதமொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இன்றைய கருத்தரங்கு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளையினர் நடத்தும் வாராந்தக் கருத்தரங்கு இனறு (புதன் கிழமை) மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி, லோறிஸ் வீதி 51ம் இலக்க இல்லத்தில் நடைபெறுகிறது. இக் கருத்தரங்கில் ‘நமது எதிர்காலம்’ எனும் தலைப்பில் சட்டத்தரணி திரு செ. வே. விவேகானந்தன உரையாற்றுகிறார்.

## திருகோணமலையில் பொங்கல்

சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் ஆத்மபலம் பெருகவும் அவர்களது நலன் வேண்டியும் எதிர்வரும் 14-1-77ல் திருக்கோணமலை காளிகோவிலில் திருக்கோணமலை தமிழ் இளைஞர் பேரவையினர் ‘பொங்கல்’ போடுகின்றனர். தமிழினத்தின் உணர்ச்சிப் பொங்கலாக இது அமையவிருக்கிறது.

## த. இ. பேரவை ஜா-எல கிளை

அண்மையில் திரு. ஈழவேந்தன் முன்னிலையில் நிறுவப்பட்ட தமிழ் இளைஞர் பேரவையின் ஜா-எலக் கிளை நிர்வாகிகள் விபரம் வருமாறு:—

தலைவர்: அ. பெனடிக்ற், துணைத் தலைவர்: மகாதேவன், செயலாளர்: தயானந்தன், துணைச்செயலாளர்: சிங்கநாயகம், பொருளாளர்: நடராஜலிங்கம், செயற்குழு உறுப்பினர்கள்: ரி. துரைசிங்கம், இ. பாலகிருஷ்ணன், வீரபுத்திரன், சீ. ஆனந்தன், சி. டி. போல், பொன். சுந்தரலிங்கம்.

**மில்க்வைற் அன்பர்கள் ஆதரவாளர்களுக்கு ஒரு முக்கிய அறிவித்தல்**

நாங்கள் பாடசாலைப் பிள்ளைகளின் கல்வித்தரம் உயரவேண்டும் என்று கருதி இலவசமாகக்கொடுத்து வரும் அரிவரி மட்டை, வாய்ப்பாடு மட்டை, இலவச வெளியீடுகள் என வெளிவந்தவைகளுக்கு நீங்கள் எவரிடமும் பணம்கொடுத்து வாங்கவேண்டாம். என்றுகேட்டுக்கொள்ளுகிறேம்.

உரிமையாளர்,

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி 194 ஏ, இலக்கத்தில் 1977ம் வருடம் ஜனவரி மாதம் 5-ம், திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org